**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்**
**அ.வ.எண். 119/2020**

பெயர் : நாகராஜ்
சாட்சி – வா.சா–2 நாள்: 06.11.2025

---

**குறுக்கு விசாரணை (2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு)**

1. நான் தற்போது திருப்பூரில் வசித்து வருகிறேன். வாதி எனது உறவினர் ஆவார். வாதியின் தாயார் எந்த தேதியில் காலமானார் என்றால் அவர் 2015 ஆம் ஆண்டு இறந்தார். தேதி நினைவில் இல்லை. வாதியின் தாயார் எந்த தேதியில் வாதியின் பெயருக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் தேதி நினைவில் இல்லை 2015 ஆம் ஆண்டில் எழுதி வைத்தார். வாதியின் தாயாருக்கு தெரியாமல் சில காலைகளில் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்று நான் எனது முதல் விசாரணை சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். என்னென்ன காலைகள் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் க.ச.512 எ காலையானது உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. உட்பிரிவு எண்கள் என்ன என்று எனக்கு தெரியாது.

2. வாதியின் தாயார் செட்டில்மெண்ட் எழுதி வைத்த தேதிக்கும், அவர் இறந்த தேதிக்குமிடையே 8 மாத இடைவெளி இருக்குமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதியின் தாயார் எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் பிழை உள்ளதாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பிழையை சரி செய்வதற்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்த தேதியிலிருந்து அவர் இறப்பதற்கு முன்பு இடையே உள்ள 8 மாத கால இடைவெளியில் வாய்ப்பு இருந்துள்ளது என்றால் அப்போது தெரியாது பின்னிட்டு தான் தெரிய வந்தது.

3. தவறாக உட்பிரிவு செய்யப்பட்டதற்கு எதிராக மாவட்ட வருவாய் அதிகாரியிடம் ஏதேனும் வாதியின் தாயார் மனு அளித்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கு பற்றிய முழு விவரம் எதுவும் எனக்கு தெரியாது என்றும், வாதி எனது உறவினர் என்பதால் அவர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2025.11.06 18:42:59 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.